உ
சிவமயம்



யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை

உயர் சைவ வேளாண்குலத்திலகர்

## திருவாளர் வேலுப்பிள்ளை கந்தையா

அவர்களின் பிரிய மனைவி

## திருமதி அன்னம்மா

அவர்கள்

இறைவன் திருவடிப்பேறு எய்தியமை குறித்து

வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

13-5-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

ஆண்டு துர்மதியில் பங்குனிசேர் முப்பத்தொன்றில்
பூண்ட திதி பங்குனிசேர் பஞ்சமியில் — தக்கபுகழ்
பெற்ற அன்னம்மாவாயிருந்த உடல் தணிந்து
சிற்பரனைச் சேர்ந்தாள் செப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி அன்னம்மா கந்தையா

தோற்றம்: *10 - 3 - 1900* நிறைவு: *13 - 4 - 1982*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

அன்பினு லடியே னுவியோ டாக்கை
யானந்த மாய்க் கசிந்துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவ பெருமானே
சீருடைச் சிவபுரத் தரைசே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசர்க்
காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென் றே
பல்லாண்டு கூறுதுமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வறிவுமாகி
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி;

## ஆறுமுகசுவாமி போற்றி

திருவல்லிப் புத்தூர் என்னும்
தேசத்தில் யாழ்ப்பா ணத்து
திருவருள் பெற்ற ஆறு
முகசுவாமி கோயில் உண்டு
பெருமைகேள் அன்னம் மாவைப்
பெற்றவ ரான தந்தை
அருள் பெற்றுச் சமாதி யான
ஆலயம் இதுவே யாகும்

## வேறு

வாழிய ஆறுமுக சுவாமி நாமம்
வாழிய அன்னவர் சமாதி நாளும்
வாழிய மண்ணு லகத்தவர் எல்லாம்
வாழிய வையகம் வாழிய நீடே

## திதி வெண்பா

துர்மதி ஆண்டதனில் தூய அபரபக்க
பர்ணமித்த பங்குனிசேர் பஞ்சமியில் — நிர்ணயித்த
ஈசன் அருளாலே இவ்வுலகை அன்னம்மா
பாசமற நீத்தாரே பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுச் சிறப்பு

பண்ணிய பவத்தை நீக்கும் பரந்த நல்லறிவுண்டாக்கும்
எண்ணிய யாவுஞ் சேர்க்கும் இருவினைத் துன்பம் போக்கும்
புண்ணிய வதியாள் எச்சட்டி மாரியம் மனென்னும்
நண்ணி னின்ருடும் யாழ் கலட்டி யென்றேதும் நாட்டில்

## பிறப்பு

அம்மனின் அருளைப் பெற்று
அணிபெறும் கலட்டி யென்னும்
செம்மை சேர் வண்ணுர் பண்ணைச்
சிறப்புறு ஊரில் முன்னுள்
இம்மியும் அன்பு குன்ரு
இயல் புள்ள நாகமுத்து
அம்மையார் கண வராக
ஆறுமுகம் தன்னை அடைந்தார்.

இருவரும் இனிமை யாக
இல்லறம் நடத்தும் போது
அருமையாய் ஆறு செல்வம்
அன்பொடு பெற்றெ டுத்தார்
அருளம் பலத்தி னேடு
அக்காவாம் தையல் முத்து
பெருமைசேர் இராசம் மாவின் பின்
பிறந்த பொன்னுத் துரையார்.

வைத்திய லிங்கம் தம்பி
வாஞ்சைசேர் சோத ரர்கள்
அயர்விலா அன்னம் மாவின்
அன்புக்கு இலக்காய் ஆனர்
நயமுறு சகோத ரர்கள்
நால்வரும் அன்பு காட்ட
பயமின்றி அன்னம் மாவும்
பருவத்தை அடைய லுற்ருர்.

மூத்தவர் சுருட்டு விற்கும்
முதலாளி ஆக நின்ருர்
சாத்திரம் மிக்க பொன்னுத்
துரை புகையிலை வர்த்தகராஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்திறம் மிக்க தையல்
முத்தொடு இராசம் மாவும்
ஏத்திடும் அக்கை மாராய்
இனிதுடன் வாழ லானார்;

## திருமணம்

மாசிலாச் சைவ வேளாண் வேலுப்
பிள்ளை யென்ற பெரியோன்
காதலுறு பேரழகி மனையாட்டி சமேதனாய்
கடவுள் பாலன்பு வைத்து
தோரார்த இல்லறத் தண்ணில விலாடித்
தோன்றிய கந்தையா தன்னை
தோகைமயில் நடையழகி தாம்பூல வாயழகி
சொல்லருங் கற்பு நெறியாள்
தாராள மனதுடையாள் அன்னம்மா
துணைவனாய்ச் சார்ந்து வாழ்ந்திட்ட தவமான்;

## மக்கள், மருமக்கள்

கந்தையா என்னும் நல்ல
கணவரை அடைந்தன் னம்மா
மைந்தராய் கந்த சாமி
ஜெயராச சிங்கம் பின்னாள்
வந்துமே பிறந்த செங்கை
யாழியான் குணரா சாவும்
சந்ததம் போற்றும் தூய
தையல ராக மூவர்

யோகரத்தி னம்ம கேசு
வரியொடு தங்கேஸ் வரியும்
தகவுறு பெண்க ளாகத்
தாரணி மீதில் வந்தார்
அகமகிழ் வோடு யோக
ரத்தினம் தன்னை அன்னாள்
புகழ்பெறு வணிக ரான
நடராசா மணந்து கொண்டார்;

சபாரத்தினம் என்னும் நல்ல
சங்கைசேர் உபர்த்தி யாயர்
மகேஸ்வரி யாம்நற் பெண்ணை
மணந்தனர் ஜெயில்காட் ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகான ரத்தி னம்தங்
கேஸ்வரி தனை மணந்தார்
பாகாக பேச வல்ல
பண்டிதன் புதுமை லோலன்

கனகமணி என்னும் அரிய
ஆசிரியையை மணம்பு ரிந்தார்
அனைவரும் விரும்பும் நல்ல
ஜெயராச சிங்கம் வாய்த்த
மனைவியாய் சிவனேஸ் வரியை
மணந்தனர் குணரா சாவாம்
புனைகதை நாவல் யாவும்
புகழ்பெறப் படைக்க வல்லோன்

நிருவாக சேவை யாளன்
நிறைந்த நல்மனம் படைத்தோன்
அருமையாய் பயிற்று கின்ற
ஆசிரி யையாய் வாய்த்த
பெருமைசேர் பட்ட தாரிப்
பெண்கம லாம்பி கையை
உரிமையாய் மணந்து கொண்டு
உவந்துமே வாழ லானார்.

## பேரர் பூட்டர்

பொங்குபுகழ் மூதாட்டி புனித வதி
மங்கையர் நற்றிலகம் அன்னம்மாள்
பேரரோ முப்பத் திஞல்வர் புகழ்
பூட்டரோ பதி னறுவர் எழில்
மூத்த மகள் யோக ரத்தினம் பயின்ற
மக்களோ எழுவர் நல்ல மன
மூத்தவன் முதற் பேரன் சிறீதரன்
நல்லதொரு ஆசிரியன் இளைய மகன்
சந்திர மோகன் உகண்டாவில்
எஞ்சினியர் மூத்த பேர்த்தி லலிதாதேவி
தகைமை பெறு ஆசிரியை மற்ருேர்
லீலாதேவி சுகந்தாதேவி யசோ வொடு
சிறீரஞ்சன் என்ருெரு பேரன்
இளைய மகள் இன்ப மகள் மகேஸ்வரி
பெற்ற மக்களோ ஒன்பதுமர் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறையறிவு தயைவீகை சபானந்தன்
ரூபாயில் கணக்காளன் இளைய மைந்தன்
சபாநாதன் நற்பண்புக் கணியாளன்
சொல்லுபுகழ் இங்கிலாந்தில் டாக்குத்தர்
அல்லாத நெறிதனில் செல்லாத அன்பினன்
சபாலிங்கம் பிரான்சில் ரி, ஏ. அவன் தம்பி
சபாநேசன் கொழும்பில் எஞ்சினியர்
மற்றும் கௌரி, வானதி, சபாஈசன், சுமதி
என்போருடன் சபாநிரஞ்சன் என்றொரு பேரன்
கடைசி மகள் ஆசைமகள் தங்கேஸ்வரி
பயின்ற மக்களோ நால்வர் நல்லறிவு
மூத்தவன் சொல்லழகன் சுடர் போல்வான்
ஜெயக்குமார் ஜேர்மனியில் உறுபதவி
மற்றும் ஜெயந்தி உதயகுமார் ஆனந்தி
எனும் நல்லன்புப் பேரர், நிறை
எழுத்தாளன் பேச்சாளன் கல்லூரி அதிபன்
கந்தசாமி பெற்ற மக்களோ அறுவர்
மூத்தவள் ஏந்திழை அன்பரசி பின்
அன்பழகன் மதியழகன் கலையரசி
எழிலரசி இளவழக னென வருவர்
இனிய மைந்தன் நல்வணிகன் ஜெயராச
சிங்கம் பயின்ற மக்களும் அறுவர்
கலைச் செல்வி கலைவாணி கலையரசி என
நல்லழகுப் புதல்வியர் மூவருடன்
கலைச் செல்வன் கலையரசன் சிவச்செல்வனெனும்
புதல்வர் மூவர் இளையமகன் நிர்வாக சேவையாளன்
இனியநற் குணராசர் பயின்ற மக்கள் இருவர்
நல்லமகள் ரேணுகா செல்லமகள்
பிரியா வெனும் பேர மக்களா மின்னேரைச்
செல்வம் நிறைந்தோங்கு மன்புப் பேரராய்ச்
செப்புவியில் மகிழத்தந்து தெய்வமானுள்.


**வேறு**

இத்தகைப் பிள்ளைச் செல்வம்
    இனசனம் சுற்றம் சூழல்
அத்தனை யாவும் பெற்று
    அன்னம்மா என்னும் தாயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ஆ. பொன்னுத்துரை



திரு. ஆ. அருளம்பலம்



திரு. ஆ. வைத்திலிங்கம்

## நிறைவுறும் ஒரு தலைமுறை!

ஆலமரமாக
வம்சத்தைக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிளை பரப்பி
மறைந்த
எம் குலத்
தலைவர்களுக்கு

# எம் அஞ்சலி



திருமதி தையல்முத்து
விஜசித்தம்பி



திருமதி இராசம்மா
சிவக்கொழுந்து



திருமதி அன்னம்மா
கந்தையா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமும் மகிழ்ச்சி யாக
நிலமிசை வாழ்ந்து சென்ருர்
உத்தமி அவரின் ஆன்மா
உய்க நற்பதமே என்றும்.

## குணதிசயங்கள்

வாழ்வினிற் சிறந்த நாளில் வருவிருந் தோம்பிக் கொண்ட
கேழ்வன்சொற் சிரமேற் ருங்கி கிளிமொழிப் பான்மை காட்டி
தாழ்வினுந் தயங்கிடாமற் சந்திரமதிபோல் வாழ்ந்த
ஆழ்கடலனைய தேவி அன்னம்மா ளவனி நீத்தாள்.

கைப்பிடித் தவனுர் மாளக் கலங்கிய கண்ணராகி
மொய்ப்புறு கைம்மை யேற்று மூலையிற் கிடவா வண்ணம்
இப்புவிப் பெண்கட் கெல்லாம் இதனை நீ எடுத்துக் காட்டி
மைப்புறு கண்டத் தெம்மான் மலரடி மருவச் சென்ருய்.

கந்தருவ நந்நகர்க்கோ கண்ணுதலான் சேவடிக்கோ
சந்தமெழு தென்பொதிகைச் சாரலுக்கோ — இந்துநுதல்
மங்கை மைந்தன் நல்லூரான் மாண்பிருதாள் காண்பதற்கோ
எங்கு நீ சென்ருய் இயம்பு.

## மக்கள் புலம்பல்

எம்மை யுன் கருவிலேற்றி ஈரைந்து திங்களாக
வெம்மை சூழ் நோயுண்டாக விருப்பிலா மருந்துட் கொண்டு
புன்மை சேர் மரணக்குன்றில் புகுந்தெமைப் புதிராய்ச் சென்ற
அம்மா நீ பிரிந்தா யெங்கள் துயருக்கோ ரளவுண்டாமோ.

பத்து மார்தம் வயிற்றிற் சுமந்து பெற்றுப்
பாலூட்டித் தாலாட்டி வளர்த் தெடுத்து
சித்தி பெறக் கல்வி கற்பித்து அமுது மூட்டித்
திருமணமும் செய்து வைத்த தெய்வத் தாயே.

மக்களாம் எங்களை நீர் தவிக்க விட்டுப்
போய் மறைந்தீர் பொல்லாத பாவியாளும்
இத்துயரம் இனிப் பொறுக்க முடியாதம்மா
எப்பிறப்பில் உனைக் காண்போம் இயம்புவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகள் புலம்பல்

ஆதவனை இழந்தவொரு பகலைப் போலும்
அச்சுடைந்து விழுந்திட்ட வண்டி போலும்
தெய்வ மில்லாத வெறுங் கோயில் போலும்
கூரையில்லாத நல் மனையைப் போலும்
நன்னீரில்லாத பாழ் கிணற்றைப் போலும்
ஆழ்கடலிற் சிக்கியவொரு துரும்பு போலும்
தாயாரே உனை யிழந்து தவிக்கிறேனே.

## இளைய மகள் புலம்பல்

தேனூர் மொழி அம்மா திரும்பியொரு வார்த்தை
ஆறு தெமதுள்ளம் அவைதெளியச் சொற்றிலையால்
போனாய் ஒரு கணத்தில் புகுதுயருக்கென் செய்வோம்
மேனாள் அறியா மிகுதுயர் நீ செய்ததென்ன.

## மூத்த மகன் பிரலாபம்

பெற்று வளர்த்தெடுத்துப் பெருமை பெற வைத்து
கற்பித்துக் கருணையுடன் கண்ணியமாய் வாழவைத்த
நற்றாயே யென்னை நாளும் அணைத்தவுடல்
முற்றும் நீறுச்சே முகமேனும் காட்டாயே.

## கடைசி மகள் புலம்பல்

சந்திரனை யிழந்த நெடு வானம் போலும்
தாமரை யிலாததொரு தடாகம் போலும்
மந்திரியை இழந்து கெட்ட மன்னன் போலும்
மதகரி யில்லாததொரு சேனை போலும்
செந்தமிழ்ப் புலவனில்லாச் சங்கம் போலும்
திருக்கோவி லில்லாத நாட்டைப் போலும்
தந்திமணி பட்டறுந்த யாழைப் போலும்
என்னுயிரே தாயே என்னினிய அம்மா
உனையிழந்து பாவி நான் தவிக்கின்றேனே.

## இரண்டாம் மகன் பிரலாபம்

மங்கா வமுதத் தாயேயுனை நினைந்த போதெலாம்
பொங்கு கடலுமுறங்காது புவியோர் நாளும் விடியாது
திங்க ளுறங்கும் புள்ளுறங்கும் தென்றலுறங்குஞ் சிலகாலம்
எங்கு முறங்கும் ராக்காலம் என் கண்களிரண்டும் உறங்காதே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊராரிருந்தென்ன உற்ருரிருந்தென்ன உன்னையன்றி
வாரார் குவிமுலை நாயகி வந்திருந் தாலுமென்ன
கூரார் மழுவிடை நாதனும் வந்து குவலயத்தில்
நேராயிருப்பினும் தாயேயுன் அன்பு நிகழ்ந்திடுமோ.

## இளைய மகன் பிரலாபம் (பட்டினத்தார் பாடல்)

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து — செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பே னினி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை யாதரித்துத் — தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த் தெடுத்துத் தாழாமே — அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்.

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் — உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப் பூ
மானே யென வழைத்த வாய்க்கு.

அள்ளியிடுவ தரிசியோ தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் — மெள்ள
முகமேன் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

## மருமக்கள் பிரலாபம்

பொய்யாத அன்பு பொருந்தியிடு மாமி
எய்யாத துன்ப மெமக்குக் கொடுத் தகன்ருய்
கையாத பேரர்களும் கரைந்து கரைந் தழுகின்ருர்
நையா வகை யெம்முன் நண்ணிடு நாள் வருமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் நாங்கள் இனியாரை அன்புடையமாமி என்போம்
அதன் பெருமை உன்னிடத்தில் அமையக் கண்டோம்
பொன்னன அன்பு கண்டோம் புன்முறுவல் கண்டோம்
புகழ் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்ற புதுமை கண்டோம்

இன்று இலாத மனையாள் தந்தாய்
இரு வினைக்கும் துணை யிருக்கும் கணவர் தந்தாய்
கண்ணன மக்கள் கண்டோம் எல்லாங் காட்டி
கண் காட்டுங் கடவுளொடு மாமி நீ கலந்திட்டாயே?

## பேரப் பிள்ளைகள் பிரலாபம்

கோயில் விழா ஊரில் கொண்டாடும் மங்கல நாள்
ஓய்வு நாள் நமக்கு உன்னில்லம் வந்திடும் நாள்
ஆயதின மெம்மை அம்மம்மா அழைத்திட்டு
பொய்யாத அன்பு மழை பெய்து மகிழ்வித்து
மேய மகிழ்வாய் விதம் விதமாம் தீனிகளை
ஊட்டி மகிழ்ந்திருந்து உறங்க வைத்து
நேயமுடன் தந்திடுவாய் நினையா தெங்குற்றாயோ
அப்பாச்சி என்றினி யாரை அழைப்போமோ?

## பெருமக்கள், மைத்துன, மைத்துனிமார், உற்றார் உறவினர் பிரலாபம்

அருகியுந்தன் மனையிடத்தெம் அடியைக் காணில்
அருட் கண்ணால் அலங்கரித்து ஆசை யீட்டால்
உருகியன்பு பெருகி வழிந்தொழுகி யோட
உறவு முறைகள் பாராட்டி உவமை கூறி
அறுசுவையோ டன்னமிட்டுத் தாகந் தீர்த்து
நேயமுடன் பேசியெம் மேல் அன்பையீந்த
பெருமை தங்கு அன்னம்மா வுன்போல்
பேருலகில் இன்னொரு பெண் பிறப்பதுண்டோ?

## நிலையாமை

தட்டுமா மலரில் வாழும் சதுர் முகன் படைத்த மண்ணை
எட்டரைத்தானை சூழ இருந்தரசாண் டோரெல்லாம்
அட்டமா சித்தியாடி அங்கத்தைப் பங்கமாக்கி
விட்டனருயிரை யென்றால் மற்றவர் விலகப்போமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னொடு மணியும் புலநில நிறைவும்
பொலிந்திடும் போகங்கள் யாவும்
பண்ணிய பயனல் பலப் பலவாகி
பற்றதுங் கோட்டை விட்டகல
கண்ணி யிற்பட்ட மானது போல
பொன்றிடும் மானிட வாழ்வை
எண்ணினல் இடியொன்றிசைப்ப தேயல்லாஸ்
இதற்கொரு மருந்து வேறுண்டோ.

காண்பதை மறந்திட்டாலும்
காயத்தை மறந்திட்டாலும்
உண்பதை மறந்திட்டாலும்
உயிர்தனை மறந்திட்டாலும்
பொன் பெறு தில்லை மன்றுள்
பொது நடப் புனிதரான
மாண்புறு நடேசர் பாதம்
மறப்பனே பிறப்புக் கெல்லாம்;

## பொதுக் கலித்துறை

மக்கள் புலம்ப மருமக்கள் கலங்க பேரரோடு
தொக்க பேர்த்திமார்க ளெல்லோருந் துயரமுற
பக்க வயலவர் சுற்றத்தவர்கள் பரதவிக்க
நக்கன் இணையடி அன்னம்மா நீ நண்ணினையோ.

## தேற்றம்

பிறந்தவர் இறப்ப துண்டு
பேசரும் உண்மை எந்தச்
சிறந்தவ ரான போதும்
செல்வமே படைத்த போதும்
மறலியின் அழைப்பை ஏற்க
மறுத்திட லாகு மோதான்
அறமிது ஆத லாலே
அவர் பிரி வாற்று வோமே;

கற்பரசி அன்னம்மா உடல் தணிந்து
சிற்பரனின் பொற்பாதம் சென்றடைந்தாள் — இப்புவியில்
மக்கள் மருமக்கள் பேரர் உறவினர்கள்
துக்க மற்று வாழ்வீரே சுபம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி → ஐயம்பிள்ளை → சதிரவேலு → ஆறுமுகம் + நாகமுத்து

- தையல்முத்து
- அருளம்பலம்
- இராசம்மா
- பொன்னுத்துரை
- அன்னம்மா + கந்தையா
- வைத்திலிங்கம்

அன்னம்மா + கந்தையா:

- யோகரத்தினம் + நடராசா
  - சிறீதரன்
  - சந்திரமோகன்
  - லலிதாதேவி
  - லீலாதேவி
  - சுகந்தாதேவி
  - யசோதராதேவி
  - சிறீ ரஞ்சன்
- மகேஸ்வரி + சபாரத்தினம்
  - சபானந்தன்
  - சபாநாதன்
  - சபாலிங்கம்
  - சபாநேசன்
  - கௌரி
  - வானதி
  - சபா ஈசன்
  - சுமதி
  - சபாநிரஞ்சன்
- கந்தசாமி + கனகமணி
  - அன்பரசி
  - அன்பழகன்
  - மதியழகன்
  - கலையரசி
  - எழிலரசி
  - இளவழகன்
- தங்கேஸ்வரி + இரத்தினம்
  - ஜெயக்குமார்
  - ஜயந்தி
  - உதயகுமார்
  - அனந்தி
- ஜெயராசசிங்கம் + சிவனேஸ்வரி
  - கலைச்செல்வி
  - கலைவாணி
  - கலைச்செல்வன்
  - கலையரசன்
  - கலையரசி
  - சிவச்செல்வன்
- குணராசா + கமலாம்பிகை
  - ரேணுகா
  - பிரியா

❋ சிறீதரன் + விஜயதேவி
- ராதிகா
- சதீஸ்
- கார்த்திகா

❋ சந்திரமோகன் + அன்பரசி
- சுகந்த்

❋ லலிதாதேவி + மகாலிங்கம்
- பிரபாகரன்
- பிரதீபன்
- அனித்தா

❋ லீலாதேவி + சிவப்பிரகாசம்
- கவிதா
- விஜிதா
- பிருந்தா

❋ சுகந்தாதேவி + குணபாலசிங்கம்
- ஷார்மிலி
- தசானி
- பிரதீமா

❋ சபானந்தன் + கமலேஸ்வரி
- சபாகரன்

❋ சபாநாதன் + திருமணி
- அனுஷா
- அனிதா

❋ சபாலிங்கம் + தயாநிதி



திருமதி க. அன்னப்பமா
தோற்றம்; 10 - 3 - 1900
நிறைவு: 13 - 4 - 1982

திரு. வே. கந்தையா
தோற்றம்: 1 - 1 - 1895
நிறைவு: 16 - 10 - 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவி திருமதி அன்னம்மா கந்தையா அவர்களின் இறுதிச் சடங்கிலும் அந்தியேட்டி வைபவத்திலும் கலந்து கொண்ட உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும். அனுதாபச் செய்திகள் அனுப்பி எமக்கு ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த பெரியார்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

| மக்கள் | | மருமக்கள் |
|---|---|---|
| ந. யோகரத்தினம் | — | நடராஜா |
| திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் | | |
| வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) | — | கனகமணி |
| இ. தங்கேஸ்வரி | — | அ. இரத்தினம் |
| க. ஜெயராசசிங்கம் | — | சிவனேஸ்வரி |
| க. குணராசா (செங்கை ஆழியான்) | — | கமலாம்பிகை |

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 8175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org